## இறைமையின் அடிப்படையிலான ஏகத்துவம்

அல்லாஹ் ஒருவனே, அல்லாஹ் ஒருவனே என்ற முழக்கம் ஹஜ்ரத் பிலால் (ர) அவர்கள் மக்காஹ்வின் இணை வைப்போர் அவர்களைத் தண்டிக்கும் வகையில் கடும்வெயிலில் அனல் பறக்கும் ஒரு பாறையின் மீது அவரை மேற்சட்டையின்றிப் படுக்க வைத்து இழுத்துச்சென்றபோது முழங்கிக்கொண்டிருந்தது. அவர்கள் அவருடைய மார்பின்மீது ஒரு பெரிய பாறையை வைத்துவிட்டனர், ஆனால், இந்த முழக்கம் ஹஜ்ரத் பிலால் (ர) அவர்களுடைய வாயிலிருந்து முழங்கிக்கொண்டிருந்தது.

உண்மையில் ஒரு உண்மையான முஸ்லிம் இவ்வாறுதான் இருக்கவேண்டும், அவன் ஒரு இறைவனை மட்டுமே வழிபடுவான் மற்றும் அவனையே உண்மையான வணக்கத்திற்குரியவன் என்று ஏற்றுக்கொள்கிறான். அவனுக்காகவே தொழுகையை நிறைவேற்றுகிறான், அவனையே வணங்குகிறான் அவனிடமே உதவியையும் நாடுகிறான். அவன்மீது மட்டுமே நம்பிக்கை வைத்து அகிலங்களிலெல்லாம் அவனுக்கு மட்டுமேகீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்று விசுவாசம் கொண்டிருக்கிறான். ஒரு முஸ்லிம் அல்லாஹ்வைத்தவிர வேறு இறைவன் இல்லை என்று நன்கறிவான், அனைத்துப் பொய்யான கடவுள்களையும் அவன் ஒருசேர நிராகரிக்கின்றான். ஆகவேதான் அல்லாஹ் கூறுகிறான்:

ذَٰلِكَ بِأَنَّ ٱللَّهَ هُوَ ٱلۡحَقُّ وَأَنَّ مَا يَدۡعُونَ مِن دُونِهِۦ هُوَ ٱلۡبَٰطِلُ وَأَنَّ ٱللَّهَ هُوَ ٱلۡعَلِيُّ
ٱلۡكَبِيرُ ﴿٦٢﴾ **(الحج: 62)**

பொருள்: *இது ஏனெனில், அல்லாஹ்தான் உண்மையானவன், அல்லாஹ் வைத்தவிர இவர்கள் அழைக்கின்ற அனைத்தும் போலியானவை. மேலும், அல்லாஹ்தான் உயர்ந்தவனும் மாபெரியவனுமாவான் (அல்ஹஜ்:62).*

இந்த நஸாராக்கள் எனப்படும் கிறித்துவர்கள் அல்லாஹ்வை வணங்குவதில்லை, இறைவனைத் தந்தை என்றும், ஹஜ்ரத் ஈசா (அ) அவர்களை அல்லாஹ்வின் மகன் என்று கூறிக்கொண்டும், பரிசுத்த ஆவி, (மும்மூர்த்தம், மூன்றன் தொகுதி) என்றெல்லாம் கூறி அவற்றை வணங்குகின்றனர். அல்லாஹ் கூறுகிறான்:

لَّقَدۡ كَفَرَ ٱلَّذِينَ قَالُوٓاْ إِنَّ ٱللَّهَ ثَالِثُ ثَلَٰثَةٖۘ وَمَا مِنۡ إِلَٰهٍ إِلَّآ إِلَٰهٞ وَٰحِدٞۚ ﴿٧٣﴾ **(المائدة: 73)**

பொருள்: *நிச்சயமாக, அல்லாஹ் மூவரில் மூன்றாமவன் என்று கூறியவர்களும் உண்மையில் நிராகரிப்பவர்களாகிவிட்டார்கள். உண்மையில் ஒரே இறைவனைத்தவிர வேறு இறவன் இல்லை. (அல்மாயிதா:73).* அரேபியர்களும் மற்ற சமூகத்தாரும் அல்லாஹ்தான் படைப்பாளன் என்று அங்கீ

www.uzairfalahi.com

*கரித்து ஏற்றுக்கொண்டபின்பும் அவர்கள் வணக்கத்தில் அல்லாஹ்வைத் தவிர மற்றவற்றையும் இணைத்துக்கொள்கின்றனர், அவர்களைப்பற்றித் தான் அல்லாஹ் கூறுகிறான்:*

**وَمَا يُؤْمِنُ أَكْثَرُهُم بِٱللَّهِ إِلَّا وَهُم مُّشْرِكُونَ ﴿١٠٦﴾ (يوسف: 106)**

*பொருள்: அவர்களில் பெரும்பாலானோர், அல்லாஹ்வை ஏற்றுக்கொள் கிறார்கள். ஆயினும், (அவனோடு மற்றவர்களையும்) இணையாக்குகி றார்கள் (யூசுஃப்:106).*

உண்மை என்னவெனில், மனிதனுடைய வழிகேட்டின் ஆரம்பம் அவன் இறைவனை முழுமையாகவே நிராகரித்தோ அல்லது அவனை வணங்கு வதைக் கைவிட்டதன் காரணமாகவோ ஆகவில்லை, மாறாக, அவனு டைய வழிகேட்டின் ஆரம்பம் எவ்வாறு ஏற்பட்டது என்றால் அவன் அல்லாஹ்வை வணங்கிவந்ததோடு மற்றவர்களின் வணக்கத்தையும் செய்யத்துவங்கினான். அவர்களிடத்தில் அதற்கான ஒரு ஆதாரமும் கூறி வந்தார்கள், இதனைப்பற்றி திருக்ஃகுர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

**مَا نَعْبُدُهُمْ إِلَّا لِيُقَرِّبُونَآ إِلَى ٱللَّهِ زُلْفَىٰٓ ﴿٣﴾ (الزمر: 3)**

*பொருள்: அவர்கள் (தம்முடைய இச்செயலுக்கு இவ்வாறு காரணம் கூறுகிறார்கள்) எங்களுக்கு அல்லாஹ்விடத்தில் அவர்கள் நெருக்கத்தை ஏற்படுத்தித் தருவார்கள் என்பதற்காகத்தான் நாங்கள் அவர்களை வணங்கு கிறோம் (அல்ஜ்ஸுமர்:3).*

அல்லாஹ் தஆலா இவர்களுடைய இந்த ஆதாரத்தின் திரையைக் கிழித்து விட்டான். அவர்களுடைய இந்த சிந்தனையை முறியடிக்கும் வகையில் அல்லாஹ் கூறுகிறான்:

**قُلِ ٱدْعُواْ ٱلَّذِينَ زَعَمْتُم مِّن دُونِ ٱللَّهِ ۖ لَا يَمْلِكُونَ مِثْقَالَ ذَرَّةٍ فِى ٱلسَّمَٰوَٰتِ وَلَا فِى ٱلْأَرْضِ وَمَا لَهُمْ فِيهِمَا مِن شِرْكٍ وَمَا لَهُۥ مِنْهُم مِّن ظَهِيرٍ ﴿٢٢﴾ وَلَا تَنفَعُ ٱلشَّفَٰعَةُ عِندَهُۥٓ إِلَّا لِمَنْ أَذِنَ لَهُۥ ۚ حَتَّىٰٓ إِذَا فُزِّعَ عَن قُلُوبِهِمْ قَالُواْ مَاذَا قَالَ رَبُّكُمْ ۖ قَالُواْ ٱلْحَقَّ ۖ وَهُوَ ٱلْعَلِىُّ ٱلْكَبِيرُ ﴿٢٣﴾ (سبأ: 22 – 23)**

*பொருள்: (நபியே, இந்த இணைவைப்பாளர்களிடம்) கூறும் அல்லாஹ் வைத்தவிர உங்களின் கடவுள்களாக நீங்கள் யாரைக் கருதுகின்றீர்களோ அவர்களை அழைத்துப்பாருங்கள். அவர்கள் வானங்களிலோ பூமியிலோ உள்ள அணுவளவு பொருளுக்கும் உரிமையுடையவர்களல்லர். வானம் பூமியின் உடைமையில் அவர்கள் பங்காளியாகவும் இல்லை. மேலும், அல்லாஹ்விடத்தில் எந்த ஒரு பரிந்துரையும் யாருக்காகவும் பயனளிக்க*

www.uzairfalahi.com

*முடியாது, யாருக்கு அல்லாஹ் பரிந்துரை வழங்க அனுமதி தந்திருக்கின் றானோ அவரைத்தவிர. இவ்வாறு அவர்களுடைய மனங்களிலிருந்து அச்சம் விலகும்போது, (பரிந்துரைத்தவர்களிடம்) உங்களுடைய இறை வன் என்ன பதிலளித்தான் என்று அவர்கள் கேட்பார்கள். அதற்கு சரியான பதிலைத்தான் தந்துள்ளான், அவன் மிக உயர்ந்தவனாகவும் மிகப் பெரிய வனாகவும் இருக்கின்றான் என்று கூறுவார்கள்(சபஉ:22,23).*

உண்மையிலேயே, இறைமையின் அடிப்படையிலான ஏகத்துவம் என்பது எந்த அளவிற்கு முக்கியமானது என்றால் அனைத்து நபிமார்களும் தங்க ளுடைய சமூகத்தாரிடம் எல்லாவற்றிற்கும் முன்பாக இதனையே கடை பிடிக்குமாறு கட்டளையிட்டார்கள். இதனைப்பற்றி திருக்ஃகுர்ஆன் இவ் வாறு கூறுகின்றது:

**اَعۡبُدُوا۟ اَللَّهَ مَا لَكُم مِّنۡ إِلَٰهٍ غَيۡرُهُۥ ۝٨٤ (هود: 84)**

பொருள்: *என் சமூகத்தினரே,அல்லாஹ்வுக்கு அடிபணியுங்கள். அவனைத் தவிர உங்களுக்கு வேறு இறைவன் இல்லை (ஹூத்:84).*

இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் முஆத்ஜ் பின் ஜபல் (ர) அவர்களை எமன் நாட்டுத் தலைமை நீதிபதியாக நியமித்து வழியனுப்பியபோது அவருக்கு அறிவுரைகளைக் கூறினார்கள்:

**إِنَّكَ تَقْدَمُ عَلَى قَوْمٍ أَهْلِ كِتَابٍ، فَلْيَكُنْ أَوَّلَ مَا تَدْعُوهُمْ إِلَيْهِ عِبَادَةُ اللَّهِ، فَإِذَا عَرَفُوا اللَّهَ، فَأَخْبِرْهُمْ أَنَّ اللَّهَ قَدْ فَرَضَ عَلَيْهِمْ خَمْسَ صَلَوَاتٍ فِي يَوْمِهِمْ وَلَيْلَتِهِمْ، فَإِذَا فَعَلُوا، فَأَخْبِرْهُمْ أَنَّ اللَّهَ فَرَضَ عَلَيْهِمْ زَكَاةً مِنْ أَمْوَالِهِمْ وَتُرَدُّ عَلَى فُقَرَائِهِمْ، فَإِذَا أَطَاعُوا بِهَا، فَخُذْ مِنْهُمْ وَتَوَقَّ كَرَائِمَ أَمْوَالِ النَّاسِ(البخاري)**

பொருள்: *முஆத்ஜ் பின் ஜபல் (ர) அவர்களே, நீங்கள் வேதமளிக்கப்பட்ட ஒரு சமூகத்தாரிடம் செல்கின்றீர்கள். அவர்களுக்கு எல்லாவற்றிற்கும் முன்பாக அல்லாஹ்வின் ஏகத்துவத்தின்பால் அழைப்பு கொடுங்கள். மக்கள் அதனை நன்கு அறிந்துகொண்டபின்பு அவர்களிடம் அல்லாஹ் தஆலா அவர்கள் மீது இரவு பகலில் ஐவேளைத் தொழுகையை கடமை யாக்கியுள்ளான் என்று கூறுங்கள். அவர்கள் தொழுகையைக் கடைபிடிக்கத் துவங்கினால் அவர்களுக்குக் கூறுங்கள் அல்லாஹ் அவர்கள்மீது ஜ்ஸகாத் கடமையாக்கியுள்ளான், அதனை அவர்களிலுள்ள செல்வந்தர்களிடமிருந்து பெற்று அவர்களிலுள்ள ஏழை எளியவர்களுக்கிடையே பங்கிட்டளிக்கப் படவேண்டும். இதனை அவர்கள் ஏற்றுக்கொள்வார்களேயானால் அவர் களிடமிருந்து ஜ்ஸகாத் வசூலிக்கவும். பாருங்கள் மக்களுடைய பொருட் களிலிருந்து எவை மிகவும் சிறப்புமிக்கவையாக இருக்குமோ அவற்றைத் தவிர்க்கவும் (புக்ஹாரி)*



www.uzairaalim.com

அல்லாஹ் ஒருவன்தான் என்பதை மனிதனுடைய பகுத்தறிவும் ஏற்றுக் கொள்கின்றது, அவனே உண்மையான வணக்கத்திற்குரியவன் மற்றும் அனைத்துப் படைப்பினங்களின் அதிபதி. ஏனெனில், இவ்வாறில்லாது அவனைத்தவிர வேறு யாரும் இருந்தால், இரண்டு விதமான நிலைகள் ஏற்படலாம். இந்தப்படைப்புகளை நிர்வகித்து ஏற்பாடுகளைச் செய்வதில் இருவரும் ஒத்து செயல்படவேண்டும், இரண்டாவதாக, அவர்களுக்கிடையில் வேறுபாடுகள் ஏற்படலாம். அனைத்து ஏற்பாடுகளும் ஒத்திசைவுடன் செயல்படும் நிலையில் ஒருவனே போதுமானவனாகிவிடுகிறான், மற்றொருவருடைய தேவையே இல்லாதுபோகும். இரண்டாவது நிலையில் ஒவ்வொரு கட்டத்திலும் கருத்துவேறுபாடு முரண்பாடு காரணமாக நிச்சயம் சச்சரவும் சண்டையும் ஏற்படலாம். இதன் காரணமாக, இந்தப் படைப்பினங்கள் அனைத்தும் அதன் இயல்பான நிலையில் நிலைத்திருக்கமுடியாது. இந்த உண்மையினை அல்லாஹ் தஆலா இவ்வாறு கூறிகிறான்:

**لَوْ كَانَ فِيهِمَآ ءَالِهَةٌ إِلَّا ٱللَّهُ لَفَسَدَتَا ۚ فَسُبْحَٰنَ ٱللَّهِ رَبِّ ٱلْعَرْشِ عَمَّا يَصِفُونَ ﴿٢٢﴾ (الأنبياء: 22)**

*பொருள்: வானத்திலும் பூமியிலும்அல்லாஹ் ஒருவனைத்தவிர மற்ற கடவுள்களும் இருந்திருந்தால் அவ்விரண்டின் ஒழுங்கமைப்பும் சீர்குலைந்து போயிருக்கும். ஏனவே, அவர்களுடைய பொய்யான வர்ணனையிலிருந்து அர்ஷுக்கு உரியவனான அல்லாஹ் மிகப் புனிதமானவனாக இருக்கின்றான் (அல் அன்பியா:22).* மேலும் கூறுகிறான்:

**قُلْ هُوَ ٱللَّهُ أَحَدٌ ﴿١﴾ ٱللَّهُ ٱلصَّمَدُ ﴿٢﴾ لَمْ يَلِدْ وَلَمْ يُولَدْ ﴿٣﴾ وَلَمْ يَكُن لَّهُۥ كُفُوًا أَحَدٌۢ ﴿٤﴾ (الإخلاص: 1 – 4)**

*பொருள்: கூறுவிராக, அவன் அல்லாஹ், ஏகன், அல்லாஹ் எவரிடத்திலும் எத்தேவையும் இல்லாதவன். அனைவரும் அவனிடத்தில் தேவையுள்ளவர்களே. அவன் யாருடைய சந்ததியுமில்லை அவனுக்கு யாரும் சந்ததியுமில்லை. மேலும் அவனுக்கு நிகரானவர் எவருமில்லை (அல் இக்ஹ்லாஸ் 1 முதல் 4).*

இவ்வகையில், நாம் கவனித்துப் பார்ப்போமேயானால் ஏகத்துவத்தின் கொள்கை ஈமானின் சாராம்சமாகும், அவ்வாறே, கலிமா **لَآ إِلَهَ إِلاَّ اللهُ** ஏகத்துவத்தின் அடிப்படையாகும். இந்த கலிமா இறையச்சம் மற்றும் கட்டுப்பாட்டின் கலிமாவாகும். இந்த உண்மையின் அறைகூவலுடன் அனைத்து நபிமார்களும் அனுப்பப்பட்டனர். இதன் அடிப்படையில் மக்களை அழைப்பது அவர்களுடைய குறிக்கோளாகவும் கடமையாகவும் இருந்தது. இதற்காவே வேதங்கள் அருளப்பட்டன, சுவர்க்கமும் நரகமும் படைக்கப்பட்டது. இதன் அடிப்படையில்தான் மறுமை நாளில் மக்கள் சுவர்க்கவாசிகள்

www.uzairfalahi.com

என்றும் நரகவாசிகள் என்றும் இரு பிரிவினராகப் பிரிக்கப்படுவார்கள். அல்லாஹ் தஆலா கூறிகிறான்:

وَمَآ أَرۡسَلۡنَا مِن قَبۡلِكَ مِن رَّسُولٍ إِلَّا نُوحِيٓ إِلَيۡهِ أَنَّهُۥ لَآ إِلَٰهَ إِلَّآ أَنَا۠ فَٱعۡبُدُونِ ٢٥ (الأنبياء: 25)

பொருள்: உமக்கு முன் நாம் அனுப்பிய எந்தத் தூதரிடத்திலும், நிச்சயமாக என்னைத்தவிர வேறு இறைவன் இல்லை, எனவே, என்னையே நீங்கள் அடிபணிய வேண்டும் என்றே வஹியின் மூலம் நாம் அறிவித்திருந்தோம் (அல் அன்பியா:25). அல்லாஹ் தஆலா மேலும் கூறுகிறான்:

يُنَزِّلُ ٱلۡمَلَٰٓئِكَةَ بِٱلرُّوحِ مِنۡ أَمۡرِهِۦ عَلَىٰ مَن يَشَآءُ مِنۡ عِبَادِهِۦٓ أَنۡ أَنذِرُوٓاْ أَنَّهُۥ لَآ إِلَٰهَ إِلَّآ أَنَا۠ فَٱتَّقُونِ ٢ (النحل:2)

பொருள்: அவன் இந்த ரூஹை வானவர்களின் மூலம் தனது கட்டளை யினால் தான் விரும்பும் அடியார்கள்மீது இறக்கி வைக்கிறான், இதனைக் கொண்டு எச்சரிக்கை செய்யுங்கள், நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் என்னைத்தவிர வேறு யாருமில்லை. எனவே, என்னையே அஞ்சுங்கள் (அந் நஹ்ல்:2).

لآ إِلهَ إِلاَّ اللهُ சுவர்க்கத்தின் திறவுகோலாகும், பாவமன்னிப்புக்கோருவதற் கான வழியுமாகும். ஒரு நாள் இறைத்தூதர் ﷺ அவர்கள் நபித்தோழர் களிடம் கூறினார்கள்:

ارْفَعُوا أَيْدِيَكُمْ، وَقُولُوا: لَا إِلَهَ إِلَّا اللَّهُ " فَرَفَعْنَا أَيْدِيَنَا سَاعَةً، ثُمَّ وَضَعَ رَسُولُ اللَّهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ يَدَهُ، ثُمَّ قَالَ: «الْحَمْدُ لِلَّهِ، اللَّهُمَّ بَعَثْتَنِي بِهَذِهِ الْكَلِمَةِ، وَأَمَرْتَنِي بِهَا، وَوَعَدْتَنِي عَلَيْهَا الْجَنَّةَ، وَإِنَّكَ لَا تُخْلِفُ الْمِيعَادَ» ثُمَّ قَالَ: «أَبْشِرُوا، فَإِنَّ اللَّهَ عَزَّ وَجَلَّ قَدْ غَفَرَ لَكُمْ (رواه أحمد)

பொருள்: துஆ செய்வதற்காகக் கையேந்துங்கள் மற்றும் لآ إِلهَ إِلاَّ اللهُ என்று கூறுங்கள், நபித்தோழர்கள் தங்களுடைய கைகளை உயர்த்தினார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் கையைத் தாழ்த்தினார்கள், பின்பு கூறினார்கள், புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே, இறைவா நீ என்னை இந்த கலிமா வைக்கொடுத்து அனுப்பினாய், இதனையே கூறுமாறும் கட்டளையிட் டாய், இதன் அடிப்படையிலேயே சுவர்க்கத்திற்கான வாக்குறுதி யும் அளித்தாய், நிச்சயமாக நீ வாக்கு மீறுபவனல்ல. பின்பு அவர்கள் ﷺ நபித்தோழர்களிடம் கூறினார்கள்: உங்களுக்கு நற்செய்தி கூறுகிறேன், அல்லாஹ் தஆலா உங்கள் அனைவரையும் மன்னித்துவிட்டான் (அஹ்மது)

நபிமார்களின் வாய்மொழியாக வந்த செய்திகளிலெல்லாம் மிகவும் சிறப் புமிக்க சொற்கள் لآ إِلهَ إِلاَّ اللهُ என்ற கலிமா மட்டும்தான். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

www.uzairfalahi.com

وَأَفْضَلُ مَا قُلْتُ أَنَا، وَالنَّبِيُّونَ مِنْ قَبْلِي:لاَ إِلَهَ إِلاَّ اللهُ، وَحْدَهُ، لاَشَرِيكَ لَهُ (مؤطأ مالك)

பொருள்: *நானும் எனக்கு முன் வந்த நபிமார்கள் அனைவரும் கூறியவற்றில் மிகச்சிறந்த செய்தி இதுவே* **لاَ إِلَهَ إِلاَّ اللهُ، وَحْدَهُ، لاَشَرِيكَ لَهُ** *(மாலிக்).*

**لاَ إِلَهَ إِلاَّ اللهُ** வின் பொருள் அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்பதாகும். அவனைத்தவிர வேண்டப்படுபவன் யாருமில்லை, அவனைத்தவிர வழிநடத்துபவன் மற்றும் வழி காட்டுபவன் வேறில்லை. இந்தக் கலிமாவின் அடிப்படையிலான கடமை யாதெனில் பொய்யான தெய்வங்கள் எதுவாயினும் அனைத்தையும் நிராகரித்து தெய்வத்தன்மைக்கு உரித்தானவன் அல்லாஹ் மட்டுமே என்ற உண்மையை ஏற்று நம்பிக்கை கொள்ளவேண்டும் என்பதாகும். இதே கலிமாதான் ஈமான் கொள்பவர்களுக்கு மறுமையில் இறைத்தூதர் ﷺ அவர்களுடைய ஷஃபாஅத்தைப் பெறுவதற்கான ஒரே வழியுமாகும். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகின்றார்கள்:

**أَسْعَدُ النَّاسِ بِشَفَاعَتِي يَوْمَ القِيَامَةِ مَنْ قَالَ: لاَ إِلَهَ إِلَّا اللَّهُ، خَالِصًا مِنْ قِبَلِ نَفْسِهِ**

பொருள்: *மறுமை நாளில் என்னுடைய ஷஃபாஅத்திற்கான தகுதியைப் பெறும் பாக்கியசாலிகள் யாரெனில், யார் முழுமையான மனத்தூய்மையுடன் அல்லது தூய எண்ணத்துடன்* **لاَ إِلَهَ إِلَّا اللَّهُ** *என்று கூறுவார்களோ அவர்கள்தான். (புக்ஹாரி).* இதுவே, அல்லாஹ் தஆலா கூறும் அந்த ٱلثَّابِتِ எனும் வலுவான வாக்கு, இதனைப்பற்றி அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

يُثَبِّتُ ٱللَّهُ ٱلَّذِينَ ءَامَنُوا۟ بِٱلْقَوْلِ ٱلثَّابِتِ فِى ٱلْحَيَوٰةِ ٱلدُّنْيَا وَفِى ٱلْـَٔاخِرَةِ ۖ وَيُضِلُّ ٱللَّهُ ٱلظَّـٰلِمِينَ ۚ وَيَفْعَلُ ٱللَّهُ مَا يَشَآءُ ﴿٢٧﴾ (إبراهيم: 27)

பொருள்: *அல்லாஹ் ஓர் வலுவான வாக்கின் அடிப்படையில் இம்மையிலும் மறுமையிலும் உறுதிப்பாட்டை அருளுகிறான். ஆனால், அக்கிரமக்காரர்களை அல்லாஹ் வழிதவறச் செய்கிறான். அல்லாஹ் தான் நாடியவற்றைச் செய்வதற்கு அதிகாரம் உள்ளவனாவான் (இப்ராஹீம்:27).*

இதே வாக்கினைப்பற்றி மற்றொரு இடத்தில் بِٱلْعُرْوَةِ ٱلْوُثْقَىٰ உறுதியான பற்றுக் கயிறு என்று கூறப்பட்ட அதனை உறுதியாகப் பற்றிக்கொள்ளும்படி அல்லாஹ் தஆலா கட்டளையிடுகிறான்:

www.uzairfalahi.com

فَمَن يَكْفُرْ بِٱلطَّٰغُوتِ وَيُؤْمِنۢ بِٱللَّهِ فَقَدِ ٱسْتَمْسَكَ بِٱلْعُرْوَةِ ٱلْوُثْقَىٰ لَا ٱنفِصَامَ لَهَا ۗ وَٱللَّهُ سَمِيعٌ عَلِيمٌ

﴿٢٥٦﴾ **(البقرة: 256)**

*பொருள்: இனி எவர் தாகூத் எனப்படும் தன்னிச்சையாக நடப்பதை நிராகரித்து அல்லாஹ்வின்மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் நிச்சயம் ஒரு உறுதியான பற்றுக்கயிற்றினைப் பற்றிப்பிடித்துக்கொண்டவராவார், அது என்றுமே அறுந்துவிடாது, அல்லாஹ் யாவற்றையும் செவியுறுவோனும் நன்கறிவோனுமாயிருக்கின்றான் (அல் பஃகறா:256).*

இந்தக் கலிமாதான் மறுமையில் ஈடேற்றத்திற்கான வழியாக இருக்கும். இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒரு நபிமொழியில் கூறுகின்றார்கள்:

**مَنْ شَهِدَ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ، وَأَنَّ مُحَمَّدًا رَسُولُ اللهِ، حَرَّمَ اللهُ عَلَيْهِ النَّارَ**

*பொருள்: யார் அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்றும் முஹம்மது ﷺ அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்றும் சாட்சி கூறுவார்களோ, அல்லாஹ் அவர்மீது நரகத்தை ஹராமாக்கிவிட்டான் (முஸ்லிம்).*

* * *

www.uzairfalahi.com